VI. கண்ணி. 2
2007

வேலுமயிலுந் துணை.

S. G. கிட்டப்பா, K. B. சுந்தராம்பாள்
பாடிய

# கிளிக்கண்ணி



ரத்தினம் பிரஸ் (பிராஞ்ச்)
65, திருப்பள்ளி தெரு, மதராஸ்-1
விலை] 1952 [0-1-0

அன்பளிப்
மகாமகோபாத்தியாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

வேலுமயிலுந் துணை.

S. G. கிட்டப்பா, K. B. சுந்தராம்பாள்

பாடிய

# கிளிக்கண்ணி

## விநாயகர் துதி.

தூண்டிடின்ப வீட்டுவழி சொல்லுங் கருணைமொழி
தூண்டிவிநாயகனைத் தோத்தரித்தே—பாண்டிவள
நாட்டில்சிறந்தசெந்தில் நாயகன்மேல் நூற்றிரண்டு
தேட்டுங் கிளிக்கண்ணி செப்புவேன்.

## நூல்.

ஐந்துகரனுக்கிளைய ஆறுமுகவேலவனைச்
செந்திற் குகந்தவனை என் கிளியே
சேரமனந் தேடுதடி

ஆனைஅழைத்தவண்டி ஆறுமுகமானவண்டி
கோழிக் கொடியோனடி என் கிளியே
கொண்டுவர வேணும்டி

கைவளையல்விற்றவண்டி காட்டில்மரமானவண்டி
சுனையில் புகுந்தவண்டி என் கிளியே
சுந்திரமாய் நின்றவணடி

கூடிக்குலாவிமெத்த குகனோடுவாழ்ந்ததெல்லாம்
வேடிக்கை யல்லவடி என் கிளியே
வெகுநாளைத் தொந்தமடி

நீலமயில்வாகனனால் நெஞ்சங்கரைந்ததன்னி
பாலுங்கசப் பாச்சுதடி என் கிளியே
பசலையும் பற்றுதடி

மாலைவடிவேலவர்க்கு வரிசையாய்நானெழுதும்
ஓலையுங்கிருக் காச்சுதடி என் கிளியே
என் உள்ளமும் கிருக்காச்சுதே

ஊரார்வசைசொல்லவும் உற்றார்வசைசொல்லவும்
வாராதவார்த்தை யெல்லாம் என் கிளியே
வந்துவந்து போகுதடி

ஐந்துவயதினிலே அறியாப்பருவத்திலே
பிஞ்சிலே கூடிணேண்டி என் கிளியே
பிரியமனங் கூடுதில்லை

வள்ளிக்குகந்தவனை மருவியிருந்தவிதங்
கள்ளப்புணர்ச்சி யல்லவடி என் கிளியே
கற்பு நிலையப்படியடி

அந்தந்தநாளையில்நான் அறியாமற்கூடிவிட்டேன்
இந்தவிதி வருகுமென்று என் கிளியே
எண்ணி யறிந்தேனில்லை

எல்லார்க்குமொருவிதம் எனக்குமொருவிதமடி
வல்லவர்க்கும் வல்லவனும் என் கிளியே
மால்மருகன் றந்தமையல்

எட்டாப்பழமடியோ யிரங்காததேனடியோ
மட்டிலா வானந்தமே என் கிளியே
மால்மருகன் றந்தசுகம்

சுட்டும்பொருளுமற்றுச் சும்மாயிருக்கவைத்தான்
எட்டிரண்டு மறியேனடி என் கிளியே
யேமாந் திருந்தேனடி

வள்ளிக்கணவன்பேரை வழிபோக்கர்சொன்னாலுமே
உள்ளங் குழையுதடி என் கிளியே
ஊனு முருகுதடி

எட்டிஎட்டிப்பார்ப்பவர்க்கு எட்டயெட்டநிற்குமது
கட்டுக் கடங்காதடி என் கிளியே
என்சுந்திரத்தின் பேருருவம்

கன்னல்மதுரமொழி கட்டழகனென்குறவன்
என்னபொடி போட்டானடி என் கிளியே
இணைபிரியக் கூடுதில்லை

அறிவென்றானம்பால் அறிவதுதன்னையென்றால்
பிரிதொன்று மில்லையென்றால் என் கிளியே
பேசா திருந்தானடி

அலைந்துதிரிபவர்க்கு ஆசையுண்டுதாபமுண்டு
கலந்து சுகிப்பவர்க்கு என் கிளியே
கண்ணீரும் வாராதடி

கானமயிலேறுமென்றன் கட்டழகன் றந்துவரும்
ஆனந்த மென்பதெல்லாம் என் கிளியே
அமுது தவிப்பதடி

உண்டார்க்கிருக்கவைக்கும் உன்மனைக்குள்ளேயிருந்து
கண்டார்க் கிருக்கவைக்கும் என் கிளியே
உன்கட்டழகன் பேருருவம்

தாழ்வாரைகைதூக்கித் தன்மனைக்குள்ளேயிருந்து
வாழ்வாரை வாழ்த்துமடி என் கிளியே
மால்மருகன் றன்கருணை

எட்டும்வரைக்கும்துன்பம் எட்டிவிட்டால்பேரின்பம்
தட்டினால் போகாதடி என் கிளியே
தானா யறிந்தேனடி

மணந்தகுழலிருந்தோன் மற்றவழகிருந்தோன்
குணந்தான் குறியாயோ என் கிளியே
கோலமயில் வாகனர்க்கு

சொல்லாதசொல்லும்வருந் துறவும்வருந்தேட்டம்வரும்
கல்லாத கல்விவரும் என் கிளியே
என்கணவரைச் சேர்ந்தவர்க்கு

என்னோடுடன்பிறந்தார் எத்தனையோபேர்கள்பட்டார்
அத்தனை பேர்கள்பட்டும் என் கிளியே
அவனாசை போகுதில்லை

மாடுமனைபோனாலென்ன மக்கள்சுற்றம்போனாலென்ன
கோடிசெம்பொன் போனாலென்ன என் கிளியே
குறுநகை போதுமடி

முத்துநகைக்குமவன் போனஒருவார்த்தைகட்கும்
பித்து பிடித்தேனடி என் கிளியே
பேசுதற்கு கூசுதடி

ஆடுமயில்வாகனனால் அன்றுமுதல்பட்டதுயர்
ஏடு மடங்காதடி என் கிளியே
எல்லா மெழுதவென்றால்

என்னைகெடுத்தான்பின் என்னதானென்றுசொன்னாய்
தன்னையுங் கெடுத்துக்கொண்டான் என் கிளியே
சண்முகத்தின் மாயவித்தை

பக்தியுள்ளபேர்களுக்குப் பயன்தரும்பொருளது
முக்திபெற்ற பேர்கட்கெல்லாம் என் கிளியே
முடிவைக்கும் செம்பொன்னது

ஊனம்வருமென்றறியேன் உள்ளுக்குள்ளேகலந்தே
மானம்பறி போச்சுதடி என் கிளியே
மற்றவர்க் கேச்சாச்சுதடி

அஞ்சியொடுங்கிநின்றேன் அழுதுசலித்துநின்றேன்
பஞ்சுபடுபாடு பட்டேன் என் கிளியே
என்பாக்கியத்தைக் காணவென்று

கொஞ்சியிருப்பார்கள் குதலைமொழிமாதரெல்லாம்
அஞ்சி யிருப்பேனடி என் கிளியே
என்குறையைச் சொல்வேனடி

மதியாதொருவார்த்தை வாயிருந்துவந்துவிடும்
எதிரொன்று சொல்லாதடி என் கிளியே
எந்தன்வண்டும் சொந்தமடி

சீவிசிணுக்கிடுவார் செந்தூரப்பொட்டிடுவார்
மேவி யிருந்திடுவார் என் கிளியே
விகற்பமொன்று மில்லையடி

வைவேன் பிணங்கிடுவேன் மறுத்துவரவிடுவார்
பொய்மையென்றுங் கூடாதடி என் கிளியே
என்பொன்னின்வடி வேலவர்க்கு

பேசியிருக்கிறார்கள் பித்தமுதல் நோய்களுக்கு
ஆசைக்கொரு மருந்தை என் கிளியே
அங்கெழுதி வைத்தாரில்லை

சரியாயெழுதிவந்தும் தங்கவடிவேலரென்னை
பிரியமா வெழுத்தெழுத என் கிளியே
பிரம்மன் மறந்தாரடி

இரண்டென்றுனப்பால் இரண்டுமொன்ருகுமென்ருன்
ஒன்றென்று மில்லையென என் கிளியே
உணர்வு தெரியவில்லை
தாரணியோர்கள்மெச்சத் தனியாகச்செய்துவந்தேன்
சீரலையாய் வந்ததனுல் என் கிளியே
நான் சீரலைய வாச்சுதடி

---

ஜெகமெங்கும் டேப்புடன் பாடிவரும்

## T. M. திருமலைசாமி தாஸ் பாடிய

### (கிளிக்கண்ணி வர்ணமெட்டு)

அத்திமுகனுக்கிளைய ஆறுமுகமானவனை
சித்தத்தில் நினைந்தோர்க்கு என் கிளியே
நித்தியா னந்தமடி என் கிளியே
செட்டிரூபம் கொண்டதொரு எட்டிக்குடிவேலவனை
இஷ்டமுடன் பூசைசெய்தால் என் கிளியே
கஷ்டம் விலகுமடி என் கிளியே
குறப்பெண்ணை மணமிட்ட குழந்தைவடிவேலவனை
மறவா திருப்போமாஞல் என் கிளியே
குறையொன்று வாராதடி என் கிளியே
சூரர்கருவருத்து சூலாயுதம்கைப்பிடித்த
பாரளந்தோன் மருமகனடி என் கிளியே
பக்தற்குப காரனடி என் கிளியே
பகதற்குபகாரனடி பாலாபிஷேகனடி
சித்தனடி ரூபனடி என் கிளியே
செந்திநகர் வாசனடி என் கிளியே
சத்ருசங்காரனடி சர்ஜனற்குநேசனடி
சித்ரமயில் வேலவனே என் கிளியே
சிந்தையில் துதிப்போமடி என் கிளியே
வேடரைக்கண்டவுடன் வேங்கைமரம்போலநின்ற
நடன ஒய்யாரனடி என் கிளியே
நாமுனு கையனடி என் கிளியே

கம்பளியை தோளிலிட்டு கன்னிவள்ளி கையைதொட்டு
எம்மலெல்லாம் செய்தவண்டி என் கிளியே
ஏகாந்த நாதனடி என் கிளியே

அருணகிரிநாதற்கு அருளதையீந்ததைப்போல்
திருமலைசாமி தாஸர்க்கு என் கிளியே
தெரிசனம் தந்தருள்வாய் என் கிளியே

---

## திருப்போரூர் தலப்புகழ்

(கிளிக்கண்ணி வர்ண மெட்டு.)

பாரோர்புகழும்திரு போரூர்முருகனடி
நேராய் வருவானடி என் சகியே
நேர்த்தி சிங்காரனடி

எங்கும்ப்ரகாசமடி இன்பம்வளர்ஞானமடி
தங்கமயில் வாகனண்டி என் சகியே
தணிகைமலை வேலனடி

மங்கையரேகேட்டுவாடி மாமயிலம்வாழும்வேலன்
யெங்கள்குல தெய்வமடி என் சகியே
யேதுக்கும் அஞ்சாதடி

பாடும்பக்தர்கள்நேசன் பழனிமாமலைவாசன்
நாடும்தீபஒளி ப்ரகாசன் என் சகியே
நம்புவார்கள் விசுவாசன்

திருப்பரங்கிரிவாழும் தெய்வகுஞ்சரிலோலன்
திருவடி தினம்துதிக்க என் சகியே
தீரும் நம் வினைகள் பல

கண்டானந்திப்போம்நேரில் கழுகுமாமலைக்கந்தன்
பண்டார ரூபனியே என் சகியே
தொண்டுபல புரிவோம் வா

சிந்தைக்குகந்தவேலன் செந்தூர்நகர்கந்தநாதன்
விந்தைமிகுந்த போதன் என் சகியே
வேலன்தமிழ்க் குகந்த நீதன்

அருணகிரிநாதர் இயற்றிய

# திருத்தணிகைத் தல திருப்புகழ்.

ஏது புத்தியை யாவெ னக்கினி
யாரை நத்திடு வேன வத்தினி
லேயி றத்தல்கொ லோவெ னக்குநி தந்தைதாயென்

றேயி ருக்கவு நானு மிப்படி
யேத வித்திட வோச கத்தவர்
ஏச லிற்பட வோந கைத்தவர் கண்கள்காணப்

பாதம் வைத்திடை யாத ரித்துன
தாளில் வைக்கநி யேம றுத்திடில்
பார்ந கைக்குமை யாத கப்பன்முன் மைந்தனேடிப்

பால்மொ ழிக்குர லோல மிட்டிடில்
யாரெ டுப்பதெ னுவெ றுத்தழ
பார்வி ருப்பர்க ளோவெ னக்கிது சிந்தியாதோ

ஓத முற்றெழு பால்கொ தித்தது
போல எட்டிகை நீச முட்டரை
ஓட வெட்டிய பானு சத்திகை எங்கள்கோவே

ஓத மொய்ச்சடை ஆட உற்றமர்
மான்ம ழுக்கர மாட நற்கழல்
ஓசை பெற்றிட வேந டித்தவர் தந்த வாழ்வே

மாதி னைப்புன மீதி ருக்குமை
யாள்வி ழிக்குற மாதி னைத்திரு
மார்ப ணைத்தம யூர அற்புத கந்தவேளே

மாரன் வெற்றிகொள் பூமு டிக்குழ
லார்வி யப்புற நீடு மெய்த்தவர்
வாழ்தி ருத்தணி மாம லைப்பதி தம்பிரானே.

---

ரத்தினம் பிரஸ் (பிராஞ்ச்) 65, திருப்பள்ளி தெரு, சென்னை-1